செ.வெ.எண் / 761 நாள். 26/10/16

# மாசற்ற மற்றும் விபத்தில்லா தீபாவளி பற்றிய செய்தி வெளியீடு

பண்டிகை மற்றும் விழாக் காலங்களில் பட்டாசுகளை வெடிப்பதால் எழும் ஓசை தற்காலிக செவிட்டுத் தன்மையும், தொடர் ஓசை நிலையான செவிட்டுத் தன்மையும் ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. 125 டெசிபல் dB(A) அல்லது 145 டெசிபல் dB (c) pk உச்ச அளவுக்கு மேல் ஓசையினை எழுப்பும் வெடிகளை தயாரிப்பது, விற்பது மற்றும் வெடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

பட்டாசு தயாரிப்பினில் பேரியம் நைட்ரேட், சோடியம் நைட்ரேட், அலுமினியப் பவுடர், அயர்ன் பவுடர், ஸ்டோன்சியம் நைட்ரேட், கந்தகம், பொட்டாசியம் குளோரைட் போன்ற வேதிப் பொருட்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. படடாசுகளை வெடிக்கும் போது கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு, கன உலோக ஆக்ஸைடு மற்றும் மிதக்கும் நுண் துகள்கள், காற்றில் கலந்து சுற்றுச் சூழல் மாசடைகிறது. இதனால் கண் எரிச்சல், சுவாசக் கோளாறு, நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

தீபாவளிப் பண்டிகையை விபத்தில்லாமல் கொண்டாட பின்வரும் ஆலோசனைகளை குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் நலனுக்காக மாவட்ட நிர்வாகமும் மாசு கட்டுப்பாடு வாரியமும் வழங்குகிறது.

- உச்ச நீதி மன்ற ஆணைப்படி இரவு 10 மணி முதல் காலை 6 மணிவரை பட்டாசுகளை வெடிக்கக்கூடாது.
- மருத்துவமனைகள். பள்ளிகள், நீதிமன்றங்கள் அமைந்துள்ள அமைதிப் பகுதிகளில் வெடிகளை வெடிக்கக்கூடாது.
- குழந்தைகளை தனியாக பட்டாசு வெடிக்க அனுமதிக்கக்கூடாது. பெரியவர்கள் உடன் இருப்பது அவசியம். மேலும் குழந்தைகளின் சட்டைப் பைகளில் பட்டாசுகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கக்கூடாது.
- போட்டிக்காக பட்டாசு வெடிகளைக் கொளுத்தாமல். திறந்த வெளிகள் மற்றும் பொது இடங்களில் கூட்டாக வெடிக்கலாம்.
- சரவெடியை நெருக்கமான குறுகிய சந்துகள் அடுக்குமாடி குடியிருப்புகளின் மத்தியில் வெடிக்கக்கூடாது.
- போக்குவரத்து அதிகமுள்ள சாலைகள், ஜனப்புழக்கமுள்ள இடங்களில் பட்டாசு கொளுத்தவேண்டாம். திறந்தவெளி மைதானங்களில் கொளுத்தலாம்.
- பொதுவாக ராக்கெட் வெடிகளினால் அதிக தீ விபத்துக்கள் ஏற்படுவதால் குடிசைகள் மற்றும் எளிதில் தீப்பற்றும் பொருட்கள் இருக்கும் இடங்களில் ராக்கெட் வெடிகளை வெடிப்பதை தவிர்க்கவும்.
- பட்டாசு கொளுத்துவதற்கு தீப்பெட்டியை பயன்படுத்தாமல் நீளமான ஊதுபத்திகளை உபயோகிப்பது நல்லது.

- பட்டாசு கொளுத்தும் போது தளர்ந்த (தொள தொள) ஆடைகளை அணிய வேண்டாம். கடினப்பருத்தி ஆடைகளை உடுத்துவதுடன் இறுக்கமாக இருப்பது நல்லது.

- தீக்காயம் ஏற்படும்பொழுது அதிகப்படியான தண்ணீரை காயத்தின் மேல் ஊற்ற வேண்டும். மற்றும் உடனடி சிகிச்சைக்கு அருகில் உள்ள மருத்துவமனைக்குச் கூட்டிச்செல்லவும்

- கண்ணில் ஏற்படும் தீக்காயங்களை நிறைய தண்ணீர்விட்டு 10 நிமிடங்களுக்கு குறையாமல் கழுவவேண்டும் பிறகு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும்.

"ஒளித் திருநாளான தீபாவளிப் பண்டிகையை" ஒலி மாசு ஏற்படுத்துகின்ற மற்றும் தடை செய்யப்பட்ட பட்டாசுகளை தவிர்த்து வண்ணமிகு ஒளி ஏற்படுத்தும் பட்டாசுகளை குறைந்த அளவில் உபயோகித்து வழக்கமான உற்சாகத்துடன் தீபாவளியை கொண்டாடி சுற்றுச் சூழலைக் காப்போம் "ஒளிப் பண்டிகையான தீபாவளியை ஒலி மாசற்ற பண்டிகையாக" பொதுமக்கள் அனைவருடைய ஒத்துழைப்போடு கொண்டாடுவோம்.

25/10/16

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

25-10-16

மாவட்ட ஆட்சித்தலைவர்.
கன்னியாகுமரி மாவட்டம்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்